
# மில்க்வைற் செய்தி
# Milk White News

தபாற்பெட்டி இல. 77, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23233


கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ▣ தை 1987 ▣ இதழ்: 133


## மணிவிழா ஆண்டு மலர்கிறது



யாழ்ப்பாணம் பல துறைகளிலும் வழிகாட்டிய காலம் ஒன்று நிலவியது. அஃது ஓரளவுக்குப் பொற்காலமாயுமிருந்தது. இலங்கை அரசியல் வளர்ச்சியில் 1924ஆம் ஆண்டு தேசாதிபதி மனிங் செய்த திருத்தம் தமிழரைத் தலைநிமிரச் செய்தது. தலைப்பாகை அணிந்த தமிழ்த் தலைவர்கள் எண்மர் சட்டசபையை அலங்கரித்தனர். இந்தவகையில் 1927ஆம் ஆண்டு தனிப்பட்ட பெருமைவாய்ந்தது. காந்தியடிகள் யாழ்ப்பாணம் எங்கும் சுற்றிப் பார்த்தார் வடக்கில் வீரவாகர் முருகேசர் கந்தையா என்பவர் முதன்முதலாக நீலம் கலந்த சவர்க்காரத்தைக் குடிசைக் கைத்தொழில் முறையில் ஆரம்பித்தார். அவரின் மைந்தர்களுள் கனகராசா அந்த ஆண்டிலேயே பிறந்தார். தொழிலகமும் கனகராசா அவர்களும் தோன்றி இன்று அறுபதாண்டுகளாகின்றன. எனவே 1987 மணிவிழா ஆண்டாக மலர்கிறது. இந்த வைபவத்தைப் பெருவிழாவாகக் கொண்டாடுவதற்குத் தொழிலதிபர் விரும்பவில்லை. நாடு நாடானபின் பார்த்துக்கொள்ளலாம், என்கிறார். அதற்குப் பதிலாக 1987இன் பன்னிரு மாதங்களும் மணிவிழா நினைவாக மில்க்வைற் செய்தி

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)



ஸ்தாபகர்
வி. மு. கந்தையா அவர்கள்

★ என்றும் இளமை குன்றாது இலங்குந் தமிழ் ★

உ
சிவமயம்



# கடவுள் வணக்கம்

## சுந்தரமூர்த்திநாயனார் தேவாரம்

திருப்பாச்சிலாச்சிரமம்
பண் - தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

அன்னையே என்னேன் அத்தனே என்னேன்
அடிகளே யமையுமென் றிருந்தேன்
என்னையும் ஒருவன் உளனென்று கருதி
இறைஇறை திருவருள் காட்டார்
அன்னமாம் பொய்கை சூழ்தரு பாச்சி
லாச்சிரா மத்துறை அடிகள்
பின்னையே அடியார்க் கருள்செய்வ தாகில்
இவரலா தில்லையோ பிரானார்.

திருச்சிற்றம்பலம்

அடியேன் என்னைப்பெற்ற தாய் தந்தையரைத் துணையென்று நினைத்திலேன், என்னை ஆட்கொண்டருளிய தலைவனே சாலும் என்று நினைத்தேன். இவ்வாறான ஒருவன் உளன் என்று தம்சீரடியார் திறத்தை நினைத்தருள் செய்வதற்கிடையில், அன்னங்கள் மிக்குவாழும் பொய்கைசூழ்ந்த திருப்பாச்சிலாச்சிரமத்தில் எழுந்தருளியுள்ள இறைவன் அடியேனையும் சிறிது திருவுள்ளத் தடைத்துச் சிறிது திருவருளைப் புலப்படுத்திலர். இவர் தமது அடியவருக்கு மறுமைநலம் ஒன்றையே அளித்தலல்லது இம்மை நலத்தை அருளுவதில்லையாயினும், இம்மையில் அடியேனைப் புரக்கும் தலைவர் இவரன்றி வேறொருவர் இல்லை.




## சொல்வன்மை

(எண்ணிய எண்ணம் முற்றுப்பெறுமாறு சொற்களைத் திறம்படச் சொல்லும் ஆற்றல்)

"விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்".

சொல்பவற்றை வரிசைப்படுத்தி இனிமையாகச் சொல்லவல்லவர்களைப் பெற்றால், உலகம் அவர்கள் ஏவிய செய்கையைக் கேட்டு அதனை விரைவாக இயற்றும்.

### Eloquence

If there are men capable of speaking on affairs cogently and with charm, the world will listen to them eagerly.

## சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவு

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவாளர் மத்தியில் உரையாற்றிய மில்க்வைற் தொழிலதிபர் இன்றைய கூட்டுறவாளர் நாடெங்கும் நல்லமுறையில் கல்விப்பணி, சமூகப் பணி செய்கிறார்கள் என்று பாராட்டினார். வசதிகுறைந்தவர்களுக்கு வாழ்வளித்த காந்தியடிகள் வழியில் நாம் பணிசெய்தல் வேண்டும் என்று ஊக்குவித்தார்.

## புலமைப் பரிசில்

இவ்வாண்டு ஐந்தாம் வகுப்புப் புலமைப்பரிசில் பெற்ற மாணாக்கர் மாணாக்கியர்களுக்குப் பாராட்டும் ஆசியும் வழங்கும் சந்தர்ப்பத்தில் மில்க்வைற் தொழிலதிபர் உபகாரங்கள் வழங்கிச் சிறப்பித்தார். வைபவம் கல்வியதிகாரி சமுகத்தில் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

## நீர்வேலிப் பலநோக்குக் கூட்டுறவு

மரம் செய்யும் உதவி மனிதர் செய்யமாட்டார்கள் என்ற பீடிகையோடு மில்க்வைற் தொழிலதிபர் சொற்பொழிவாற்றிப் பெருமளவில் மரம்நாட்டு விழாவுக்கான உபகரிப்புகள் செய்தார். வீட்டுத்தோட்டம் சத்துணவு கிடைக்க வழிசெய்யும் என்று ஊக்குவிப்புச் செய்தார்.

## காசநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம்

பண்ணை மார்புச் சிகிச்சை ஆலோசனைகளைச் சிறு துண்டுப்பிரசுரமாக வெளியிட்டுப் பரப்பிய தொழிலதிபர் கனகராசா அவர்களைக் கழகத்தார் பாராட்டுகிறார்கள். "கண்ட இடத்தில் துப்பாதீர் காசநோயைப் பரப்பாதீர். சளிப்பரிசோதனை, எக்ஸ்கதிர்படம் இவற்றின் இன்றியமையாத உதவிகளை நாம் கவனித்தல் வேண்டும். நீரைக்காய்ச்சி பருகுதல் ஆரம்பசுகாதார விதியும் நோயணுகா நெறியும். நோய் வராமல் தடுக்க B.C.G. அதிசயமருந்து.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

## மணிவிழா ஆண்டு மலர்கிறது

சிறப்பு இதழ்களாக மலரும். தொழிலக உற்பத்திகளுக்கு மக்கள் அளிக்கும் ஆதரவுப் பலத்தாலேயே செய்தி மலர்கிறது. ஆதரவு மலரச் செய்தி மலரும்.

★ அன்றுமுதல் இன்றுவரை அழியாத தமிழ் ★

# WELCOME NEW YEAR

Let there be peace and plenty.
Let good partnership prevail
Let there be a wonderful way of living
Let the year return to Human Dignity
Let there be rice and milk
Let the children learn something good
Let Humanism triumph
Let workers have their share

# WITH A WRY GRIN TO 1986

Even top swimmers can drown in women's tears. Truth appeals to man's reason, falsehood—to his ears.

— Sputnik

## போய்வருகிறாயா?

போய்வா அப்பா, போய்வா. நீ மீண்டு வர நூறாண்டாகும். நீ 2086 ஆக வரும்போது எங்கள் பேரப்பிள்ளைகளின் பேரப்பிள்ளைகள் உனக்கும் உன் மூத்த தமையன் முதலான 1983, 1984, 1985 ஆகியோருக்கும் தீபாவளி கொண்டாடுவார்கள். புதிய புராணங்களில் அசுரகாண்டம் என்னும் தலைப்பில் நீங்கள் இடம் பெறுவீர்கள்.

# In the hours of meditation

**F. J. Alexandar**

(Advaita Ashrama, Mayavati, Almora)

There are hours when one forgets the world. There are hours when one approaches that region of blessedness in which the soul is self-contained and in the presence of the Highest. Then is silenced all clamouring of desire; and sound of sense is stilled. Only God Is.

## தியானகாலம்

(சிவதொண்டன்மடம்)

மனிதன் உலகத்தை மறந்திருக்கும் காலங்களும் உண்டு. ஆன்மா தானேதானாய் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதான் சந்நிதியில் நிற்கும் ஆனந்த நிலையை அணுகும் காலங்களும் உண்டு. அங்கே ஆசையின் ஆரவாரங்கள் யாவும் அடங்கிவிடுகின்றன. புலன்களின் சப்தங்கள் யாவும் நின்றுபோகின்றன. இறைவனே நிற்பன்.

*NO WASHING IS COMPLETE WITHOUT*
*MILK WHITE BLUE SOAP*

## அன்பு

— சுவாமி சித்பவானந்த —

வாழ்வை இனியதாக்குவது
துன்பங்களை நீங்கச்செய்வது
குடும்ப வாழ்வை மேன்மைப்படுத்துவது
உலக வாழ்வைச் சுவைக்கச்செய்வது
அழகற்றதுக்கு அழகூட்டுவது
அன்பு பொழியுமிடம் சுவர்க்கம்
மனமே, நீ அன்பில் ஊறி வளர்க.

" அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே."

— திருமூலர்

## பிரியாவிடை பெற்றவர்

இரணியன், பகன், சூரன், நரகாசுரன், அற்றிலா, சைமன், ஹிட்லர், முசோலினி. இவர்கள் வல்லம் யாம் என்று வலிமை பேசினவர்கள். ஆணவமுனைப்பும் அழிவுப் பாதையும், சித்திரவதையும் என்றும் நிலைக்க மாட்டா.

## தமிழே! உனக்கு உலகம் எங்கும் விழா எடுப்போம்

தமிழே, எங்கள் தாயே! வாழ்வே, வாழ்வின்கனியே! எமக்கு உலகில் முதன்மைத் தானம் தரும் நாகரிகம், வாழ்வியல், கலைநுணுக்கம், அகவியல், புறவியல், மொழிச் சிறப்பு, அறச்சிறப்பு, கடவுட்கோட்பாடு எல்லாந்தந்த தமிழே! நீ வாழ்க!

நீ தொகை நூல், பாட்டுநூல், மறைநூல், முறை நூல், அறநூல், பிரபந்த நூல், காப்பிய நூல், நல்லொழுக்கநூல் என்பனவும் இன்னும் தந்தாய். உலக மொழிகள் ஒலிக்க உதவினாய். எங்கள் உதட்டை அசைத்து அருமையாக ஒலிக்கச் செய்தாய். மெலிதாய், வலிதாய், இடையினமாய் நிலவுகிறாய். உயிராய், மெய்யாய் உயிர் மெய்யாய் நிற்கிறாய்.

ஏழைகளை வாழவைத்தாய், செல்வர்களை இரங்க வைத்தாய், மன்னர்களைப் பணியவைத்தாய், புலவர்களை தலைநிமிரவைத்தாய், உன்னைப்போலப் பிறநாட்டவர் உள்ளத்தைத் தொட்ட மொழி உலகில் வேறெதுவுமே இல்லை. இல்லை.

உன்னை அம்மா என்றும், அக்கா என்றும் பிறமொழிகள் அழைக்கின்றனவே, அன்றி உன்னை மகளே என்றோ தங்கை என்றோ எம்மொழியும் அழைக்கவே இல்லை.

உனக்கு மூவேந்தர் உறவினர். முச்சங்கங்கள் முதுசொம், முந்நாடுகள் சொந்தம். உன்னை "எத்திசையும் புகழ்மணக்க இருந்த தமிழணங்கே" என்று புலவர்கள் போற்றியுள்ளனர். உனக்கு உச்சிமுதல் உள்ளங்கால்

வரை அணிகள் உண்டு. நீ இழந்துபோன அணிகள் நூற்றுக்கணக்கானவை. அவை வெள்ளத்தால், கறையானால், தீயால், வஞ்சகரால் அழிந்தன என்பர்.

பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரியா விரை, கலி, குருகு, வெண்டாளி, வியாழமாலை, அகவல் என்பன போனஇடந்தெரியாது புலவர்கள் கண்ணீர் வடித்ததும் உண்டு. இன்றுள்ள அணிகலன்களே உனக்குப் பெருஞ்சுமை!

இந்தச் சுமையோடு பிறநாட்டு நல்லறிஞர்களும், புறச்சமயவாதிகளும் உன்னை வெகுவாக நேசித்து அன்பின் அறிகுறியாக அநேக ஆபரணங்களைச் செய்து தந்து உன்னழகு பார்க்கின்றார்களே! நீ வாழ்க!

## பாரதியும் நாவலரும்

தமிழ்நாட்டில் சிறுவன் ஒருவனுக்கு யாழ்ப்பாணத்தான் பாரதிப் பட்டங் கொடுத்தான். அந்தச்சிறுவன் பெரியவராயபின், அவர் பெருமையை அறிந்த யாழ்ப்பாணத்தார் நாவலர் என்னும் பட்டத்தை நல்கினர்.

அந்தப் பெரியவர் ஆணழகன், மதியழகன், பேச்சழகன். நற்றமிழ் என்னும் நூலும், வள்ளுவர் வரலாறு, மாரிவாயில், சேரர்தாயமுறை, மங்கலக் குறிச்சியின் பொங்கல் நிகழ்ச்சி, சேரர் பேரூர், தசரதன் குறையும் கைகேயி நிறையும் முதலிய பலநூல்கள் எழுதியதோடு, தொல்காப்பியத்துக்கு விளக்கமும் தந்தவர். மதுரைத் தமிழ்ச்சங்க ஏடான செந்தமிழ் பத்திரிகையிலும், காந்தைத் தமிழ்ச்சங்க ஏடான தமிழ்ப்பொழில் பத்திரிகையிலும், தென்னிந்திய சைவசிந்தாந்த சபை வெளியீடாய செந்தமிழ்ச்செல்வி ஏட்டிலும் நிறைய எழுதியவர். தலை சிறந்த சட்டத்தரணி. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் விபுலாநந்த அடிகளாரின் பின், தமிழ்த்துறைப் பேராசிரியராயிருந்தவர். பாட்டுக்கொரு பாரதியும் நாட்டுக்கொரு நாவலனுமானவர். அவருக்கு டாக்டர், கணக்காயர் முதலான பெரும் பட்டங்களும் உண்டு. அவர்தான் பசுமலை ச. சோமசுந்தர பாரதியார்.

## ஔவையார் கண்ட நாடு எமேர்சன் போற்றிய நாடு

நிலனே நீ ஒன்றில் நாடேயாக, ஒன்றில் காடேயாக, ஒன்றிற் பள்ளமேயாக, ஒன்றில் மேடேயாக, எவ்வாறாயினும் எவ்விடத்து நல்லவர் ஆண்மக்கள் அவ்வழி நீயும் நல்லையல்லது நினக்கென ஒரு நலமும் உடையையல்லை வாழி.

நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவ ராடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே.

புறம் 187

The true test of civilisation is, not the census, nor the size of cities, nor the crops, but the kind of man that the country turns out.

— Emerson




பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் அரசாங்கத்தின் பரிபாலனத்தில் 474 பாடசாலைகளும், உதவி நன்கொடை பெற்ற முகாமையாளரிடம் 1646 பாடசாலைகளும் இருந்தன. அரசாங்கம் கல்வியின் பொருட்டு 1896ஆம் ஆண்டில் வித்தியாவிருத்திச் சங்கம் என்றொரு சங்கத்தை ஆரம்பித்தது.

மதுவிலக்கு இயக்கம் 1905ஆம் ஆண்டில் பெருமுயற்சி எடுத்த காலத்தில் இருபது வயது நிரம்பிய இராசரத்தினம் பெருமளவில் பங்குபற்றினர்.

ஊர்காவற்றுறையில் நீதவான் வேலைபார்த்துப் பெரும் புகழ்பெற்ற வைமன் கதிரவேற்பிள்ளை அவர்களின் உருவப்படத் திறப்புவிழா 1-5-1909 ஆம் ஆண்டில் நீதிமன்றத்தில் திறந்துவைக்கப்பெற்றது.

## தர்மவித்தியாசாலை

சிறுப்பிட்டி வைரவநாதர் தாமோதரம்பிள்ளை அவர்கள் தம் தாயார் பெருந்தேவியார் பிறந்த ஏழாலை மண்ணில் 1867ஆம் ஆண்டில் ஒரு பாடசாலையை ஆரம்பித்தார். அங்கே கல்வியூட்டிய சுன்னாகம் முருகேச பண்டிதர் அதனைத் தர்ம வித்தியாசாலை என வழங்கினர். வித்தியாசாலைகளை அமைக்கும் பழக்கத்தை எங்கள் மத்தியில் புகுத்தியவர் போத்துக்கேயர். அதனால் எம்மவரின் பழைய திண்ணைப் பள்ளிக்கூடங்கள் செல்வாக்கற்றுப் போயின.

## கல்யாண கோலாகலம்


தமிழர் வீட்டில் திருமண நிகழ்ச்சி என்றால் குறிப்பிட்ட நாளின் முன் ஒரு மாத காலத்துக்கும், அதன்பின் ஒருமாத காலத்துக்கும் பெருவிழாக் கொண்டாட்டமாகும். பலவிதமான தொழிலாளருக்கும் அங்கே முறையான அழைப்பும் வேலைகளும் உபசரிப்பும் நடைபெறும். உற்றார் உறவினர் குடும்பங்களோடுவந்து தங்கிவிடுவார்கள். விருந்தோம்பல் பெருமளவில் நடைபெறும். பல்லக்கு, தண்டிகை, குதிரை முதலிய ஊர்திகள் ஓயாமல் ஓடித்திரியும். மங்களவாத்தியம், வாணவேடிக்கை, நடனம், கும்மி, கோலாட்டம், ஊஞ்சல், ஏசல் எல்லாம் விமரிசையாக நடைபெறும். இவை இவ்வாறாக ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் இவ்வித வைபவங்களுக்கு வரி விதிக்கும் முறை தலையெடுத்தது. கல்யாணவரியின் கொடுமை தாங்கமாட்டாத தமிழர், பிள்ளையார் பூசை செய்து தாலிகட்டுவாராயினர்.

இதற்குள் தமிழ்த்தலைவர்கள் மிகவும் இரகசியமான முறையில் கண்டியரசனிடம் தூதனுப்பித் தங்கள் குறையை முறையிட்டனர். இதை அறிந்த ஒல்லாந்தர் வரிப்பளுவை நீக்கிவிட்டனர்.

★ ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழி ★

## நினைவிற் கொள்ளத்தக்கவை

1. வேத்திரப் படையோன் ... நந்தி
2. மந்திரம் உச்சரிக்கப்பெற்றநீர்...தர்ப்பணம்
3. விரும்பிய பொருள் ... காமியம்
4. மூற்பிறவிகளில் ... உம்மை
5. சந்திரன் சூரியனோடு ஒடுங்குதல் ... அமாவாசை
6. நோயில்லாதவன் ... நிராமயன்
7. எட்டுத் திசையிலுமுள்ள யானைகள்...திக்கயம்
8. சட்டைதரித்த வடிவம் ... கஞ்சுகப்படிவம்
9. திருமாலின் கடைசி அவதாரம்... கற்கி
10. வாழைப்பூ வடிவானது ... போதி
11. ஆடிய திருக்கோலம் ... குனித்தவண்ணம்
12. பெருமையுடைய கடல் ... புனல்
13. மனத்தாற் செய்யப்படுவன ... மானதம்
14. வாக்காற் செய்யப்படுவன ... வாசிகம்
15. காயத்தாற் செய்யப்படுவன ... காயிகம்
16. விரதமுடிவிற் செய்யும் சடங்கு... உத்தியாபனம்
17. நீரினுற் செய்யும் உபசாரம் ... அருக்கியம்
18. தூரத்திலுள்ளதை அண்மையில் விழுத்தல் ... அகருடனம்
19. புலனுகாததைக் காணவைத்தல்...அதிரிச்சியம்
20. மறைந்திருந்ததை வெளிக்காட்டல்... அஞ்சனம்
21. பகைவரை நணபராக்குதல் ... வசியம்
22. இரும்பைப் பொன்னுக்குதல் ... வாதம்
23. முதியவரை இளைஞராக்குதல் ... வயத்தம்பம்
24. மரணந்தரும் வேள்வி ... அபிசாரம்
25. மேலே நோக்கும் கண்ணுள்ளவன் ... விருபாக்கன்




## சுவாமி சிவானந்தர்

1. சோம்பேறிப் பேச்சுப்பேசிப் பொழுதை வீணுக்காதே
2. முகஸ்துதிக்காரனை ஒருபோதும் நம்பாதே
3. வறுமையே நல்ல காரியத்துக்கு விளைநிலம்
4. குறைவாகப் பேசி நிறைய வாசித்தறி
5. எவரையும் மனம்நோவப் பேசாதே
6. கஷ்டங்கள் எம்மைச் சுத்திகரிக்கின்றன
7. அறியாமையிலிருந்து கேடு விளைகிறது
8. கீழ்ப்படியப் பழகினவர் கட்டளையிட வல்லவராவர்
9. மற்றவரை மகிழ்வித்தால் நீ மகிழ்ச்சியடைவாய்

## மிகப்பெரிய விமானசேவை

ஏரோபுளொட் என்றல் ரஷ்யநாட்டில் 1300 பெரிய விமானங்கள் 900,000 கிலோ மீற்றர் தூரங்களுக்கு 400000 ஊழியர் சேவையில் பத்துக்கோடி மக்களை 67 நாடுகளோடு தொடர்புபடுத்துகின்ற சேவை. இட்டுச் செல்வதும் எடுத்துச் செல்வதும் அதன் மகத்தான சேவை

## மூதறிஞர் றொல்ஸ்ரோய்



அறியாமையைக் கண்டு அஞ்சவேண்டியதில்லை. ஆதாரமில்லாத அர்த்தமில்லாத கல்வியைக் கண்டால் அஞ்சவேண்டும். கடவுள் மனிதனுக்கு அருளிய நியாயம் இவன் தன்னை அறியவும், தனக்கும் உலகுக்கும் உள்ள தொடர்பை அறியவுமேயாம்.

ஒவ்வொருவரும் உலகத்தைத் திருத்துவதற்கு முற்படுகிறர். ஆனல் எவரும் தன்னைத் தானே திருத்திக் கொள்ள முற்படுவதைக் காணேம்.

மகிழ்ச்சிகரமான குடும்பங்கள் யாவும் ஒரேமாதிரியானவை: துன்பகரமான குடும்பங்கள் தனித்தன்மை வாய்ந்தவை.

மனிதன் பாரம்பரியத்தைக் கொண்டு நியாயத்தை உரைத்துப்பார்க்கலாகாது, நியாயத்தைக் கொண்டு பாரம்பரியத்தை உரைத்துப்பார்த்தல்வேண்டும்.

நல்லமொழி என்பது விபரங்களைவிடாமல் உன்னிப்பாகக் கட்டுப்படுத்தியுள்ளது. நல்லபேச்சென்பது நன்ருகப் பரிசீலிக்கப்பெற்றமைவது.

## ஊசியிலை மரம்

புவியியல் பாடத்தில் ஊசியிலைக் காட்டைப்பற்றிப் படித்தவர்களுக்கு அந்த மரத்தின் அதியற்புத மருத்துவ குணத்தைப்பற்றி எந்த நிபுணரோ பேராசிரியரோ அக்காலத்தில் விரிவுரை நிகழ்த்தவில்லை.

அந்தக்காலத்தில் கடலோடிகள் ஐரோப்பாவிலிருந்து புதுநாடுகள் காண்பதற்குப் போனபோது, உயிர்ச்சத்து உள்ள உணவின்றி ஸ்கேர்வி என்னும் நோய்வாய்ப்பட்டு உடல்மெலிந்து எழுந்து நிற்கவும் உறுதியின்றித் தள்ளாடினர்களாம்.

இற்றைக்கு 350 ஆண்டுகளுக்குமுன் வட அமெரிக்காவில் வாழ்ந்த இந்தியர் அந்தக் கடலோடிகளை வெறுப்போடு நோக்கியபோதிலும், மனிதாபிமானம் காரணமாக அவர்களின் நோய்க்கு மருந்தளித்துக் குணப்படுத்தினர்களாம். இவர்கள் கொடுத்த மருந்து

குான் என்னவோ என்னின், ஊசியிலே மரத்தின் குச்சிகளை அவித்த குடிநீர்தான் என்பதை ரஷ்யா வெளியிடும் ஸ்பூட்நிக் சஞ்சிகை தாராளமாகத் தெரிவிக்கிறது. இந்த மரக்குச்சியில் அப்பிள் பழத்தின் சத்திலும் பார்க்க C. A. இன உயிர்ச்சத்து மிக்குள்ளனவாம். லெமன் இனத்து எலுமிச்சையும் பைன் மரத்துக்குத் தோற்குமாம். தள்ளாடி விழுந்தவர்களை தளர்ச்சி நீக்கி உல்லாசமாக ஓடச்செய்த ஊசிமரமே நீ வாழ்வாயாக. நீ எங்கள் நாட்டில் வந்து வேர்கொள்ளும் நாளை நாம் எதிர்பார்க்கிறோம். நாங்கள் அப்பிள், திராட்சை முதலிய தாவரங்களுக்கு வரவேற்புச்செய்துள்ளோம் நீயும் வருகிறுயா? வா வா நல்லதுதானே. மக்கள்வாழ மரம்நடும் மில்க்வைற் உன்னை எதிர்பார்க்கிறது. வந்துபார். வணக்கம்.

## நரியும் பூனையும்

இலந்தைக்காட்டு நரியும் ஏழ்பனை நாட்டு வேளாளன் வீட்டுப் பூனையும் நட்புறவுகொண்டிருந்தன. நரி தான் சுவைக்கும் நண்டுகளில் ஒன்றைத் தன் நண்பன் பூனைக்காக நாள்தோறும் தன் புதரில் வைத்திருத்தல் வழக்கம். வேளாளன் வீட்டுப் பூனை தன் வீட்டுக்காரர் படைபடையாகப் பரணில் அடுக்கிவைத்திருந்த பனாட்டில் ஒரு தட்டு நரிக்குக் கொண்டுசென்று கொடுத்து வந்தது. பனாட்டுத்தின்ற நரி, மேலதிகமாகத் தின்பதற்கு ஆசைப்பட்டுப் பூனையிடம் கேட்டது. பூனை இதற்கு மேல் என்னால் கொண்டுவர இயலாது, நீ வேண்டுமானுல் எங்கள் வீட்டுக்கு வா, நான் பனாட்டுக் குவியல் கிடக்கும் பரணைக் காட்டித்தாரேன் என்றது. பூனை வழிகாட்ட, நரி நடுச்சாமத்தில் பரணிலே தாவிப் படைபடையாகப் பல பனாட்டுத் தட்டுக்களைப் பதம் பார்த்தது. நிறைய உண்ட மகிழ்ச்சியினுல் நரி பரணில் ஒரு மூலையில் படுத்துக்கொண்டது. அதற்குக் குதூகலம் உண்டாகவே, அது தான் வழக்கமாக ஊளையிடும் குரலை மாற்றி, உரத்த சத்தமிட்டுக் குரல் எழுப்பியது. வீட்டுக்காரன் நித்திரை குழம்பி, இஃது என்னடா புதுக்குரலாய் இருக்கிறதே! என்று பார்த்தபோது, நரி மெதுவாகப் பரணைவிட்டு விலகி அப்பால்போக முயன்றது. புத்தியுள்ள வீட்டுக்காரன், தன் கையில் வைத்திருந்த பெருந்தடியினுல் நரியை நையப்புடைக்கவே, நரி தான் தின்ற பனாட்டை வாயாலும் மலவாசலாலும் வெளியே கக்கியது. அடிவாங்கி இளைத்த நரி மெதுவாக வெளியே தாவி ஓடியது.

நரி பட்டபாட்டைக் கண்ட நாய் மனமிரங்கி நரியைப் பார்த்துச் சொன்னது.

"கூடாத கூட்டங்கள் கூடாதே
கூடங்கள் மாடங்கள் ஏருதே
பாடாத பாட்டுக்கள் பாடாதே
பரணிலே ஏறிப் படுக்காதே
தந்திரம் தெரியும் என்றெண்ணுதே
தவறுகள் தப்புகள் செய்யாதே."

**Milk White products are successful choice everywhere.**

உ
சிவமயம்

## சிதம்பரம் சபாநாயகர் கோயில்
## ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ நடராஜமூர்த்தி
## சித்சபாசம்புரோட்சண சித்விலாச
# மகா கும்பாபிடேகம்

ஈஸ்வரன் என்றுல் சிவன், கோயில் என்றுல் சிதம்பரம், பூ என்றுல் தாமரை என்னும் சைவத்தமிழ் வழக்காற்றில் வந்து நிலவி ஒளிபரப்பும் சிதம்பர சபாநாதர் திருக்கோயில் உலகத்துக்கு இருதயம். உலகமெல்லாம் ஒலி கேட்பச் சிவபெருமான் நடராச மூர்த்தத்தில் திருநடனஞ் செய்கின்ற ஆகாய மயமான தலம் சிதம்பரம். திருமுறைகளுள் அதிகமான பதிகங்கள் பாடப்பெற்ற திருத்தலம் சிதம்பரம்.

இதற்குப் பூலோக கைலாயம், இரண்ய கோசம், ஞானசுகோதயம், முத்திபரப்பிரமம், சபை, பொது முதலான திருநாமங்கள் வழங்குகின்றன. புலிக்கால் முனிவரும் பாம்பு முனிவரும் பெருந்தவஞ் செய்து இறைவனுடிய நடனங் கண்ட தலம் இது. கொற்றவன்குடி முதலியாரெனப் பின்னர் வழங்கிய தில்லைவாழந்தணர் உமாபதி சிவாசாரியார் சித்தாந்த சாத்திரங்கள் பெருமளவில் செய்த தலம் இது. ஆறுமுகநாவலர் சைவத்தமிழ் வளர்ச்சியின்பொருட்டு சைவப்பிரகாச வித்தியாசாலை நிறுவி, அறக்கட்டளை உண்டாக்கிய இடம் இது. யாழ்ப்பாணத்தார் பலர் ஆங்காங்கே மடங்கள் நிறுவிய இடம் இது.

ஆறுமுகநாவலர் முன்னேரான ஞானப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகள் நாற்பதுநாள் உபவாசமிருந்து பெருநூல்கள் செய்ததோடு, குளமும் மடமும் அமைத்த இடம் இது. இது அமைக்கப்பெற்ற ஆண்டு 1650 என்பதால் எமக்கும் சிதம்பரத்துக்கும் உள்ள நீண்டகாலத் தொடர்பு தெரிகிறது. இன்றுவரை சிதம்பரேசர் திருக்கோயில் பரிபாலனத்தில் யாழ்ப்பாணத்தார் உபகரிப்பு நிலவிவருகிறதோடு சிதம்பரத்துக்கு எழுதப்பெற்ற நிலப் பரப்பும் பெரிதாக உள்ளது.

அயலில் திருவேட்களத்தில் இராசா அண்ணாமலைச் செட்டியாரின் பல்கலைக் கழகம் பேரொளி பரப்புகின்ற சூழலும் அமைந்த சிதம்பரம் எல்லாவகையாலும் சிறந்து விளங்குகின்றது. யாழ்ப்பாணத்தவருள் காரைநகரார் ஆண்டுதோறும் சிதம்பரஞ் சென்று ஆருத்திரா தரிசனம் கண்டு, ஆடிக்கொண்டார் திருவடியை வழிபட்டு வந்தது ஒருகாலம். அக்காலம் மலரப்போகிறது என்பதற்கு அறிகுறிகள் உண்டாகின்றன. காரைநகரார் சிதம்பரேசனை மறக்க முடியாமல் தங்கள் சூழலில் ஈழத்துச் சிதம்பரம் அமைத்து, அங்கே நடைபெறும் ஒழுங்கில் இங்கேயும் அபிடேகம் ஆராதனை விழாக்கள் செய்யும் சிறப்பே சிறப்பு. ஐம்பதாண்டுகளுக்கு மேலாகக் குஞ்சிதபாதங் கண்டு பூசை செய்யும் சிவத்திரு சீலத்திரு குருக்கள் ஐயா அவர்களின் தவமே தவம்.

சிவபெருமானின் பஞ்சகிருத்திய பரமானந்த தாண்டவச் சிறப்பை இன்று விஞ்ஞான வளர்ச்சிகண்ட மூதறிஞர்கள் மேற்குலகில்அறிந்துவிம்மிதங்கொள்கிருர்கள்

கள். பெருஞ்செல்வம் பொங்கும் நாட்டவர் நடராச மூர்த்தத்தை லட்சங்கொடுத்துச் செய்விக்கிறார்கள்.

திருமுறைகளைப் பேணிக் காத்துத் தமிழுலகுக்குத் தந்தருளிய சிற்றம்பலமேய செல்வன் தாள் வணங்கிச் சென்னைச் சைவசித்தாந்தப் பெருமன்றத்தார் முதலாண்டு விழாக் கொண்டாடியபோது தலைமைதாங்கும் பேறு பெற்றவர் எங்கள் இராமநாதன். அந்தப் பெருமன்றத்தின் பொன்விழாப் பொலிவுகண்டு பூரித்து ஆனந்தமயமாகத் தலைமை தாங்கி அருமையாகப் பேசியவர் எங்கள் நடேசபிள்ளை.

இவ்வண்ணம் எங்கள் நாட்டவரைச் சென்றகாலத்தின் பழுதிலாச் சிறப்பில் சேர்த்து ஆட்கொண்டருளிய அப்பனுக்கும் அம்மைக்கும் சம்புரோட்சண கும்பாபிடேகம் நடைபெறப்போகும் குதூகலச் செய்தியே செய்தி.

அஃதாவது அட்சய ஆண்டு தைமாதம் இருபத்தொன்பதாம் நாள் புதன்கிழமை 11-2-1987 இல், புனர்பூச நட்சத்திரத்தில் காலை 8-39 முதல் 10-09 மணி நிமிட வேளையில் நடைபெறவுள்ளது. அதேவேளை ஆங்குள்ள சிற்சபை, கனகசபை ஆகிய சபா மண்டபங்களும் புத்தொளிவீசிப் பார்ப்பவரைப் புனிதராக்கிப் பூரிப்படையச்செய்யும். அங்கு செல்ல வசதியில்லாத நம்மவர் இங்கிருந்தவாறே ஆதிரையான் பொற்பாதத்தை நினைத்து, ஆனந்தக் கண்ணீர் வடித்து அரோகரா ஒலிப்போமாக. அரோகரா!

## சிறுவர் பகுதி



## பெரியாரை வணங்குதல்

தம்மிலும் பார்க்கப் பெரியவராய தாய், தகப்பன், தமையன், தமக்கை, குரு முதலானவர்களை மதிக்கவேண்டும். அவர்களுக்குத் தீமை செய்தலாகாது. பெரியாரைப் பிழையாமை என்று திருவள்ளுவர் கூறியுள்ளார். பெருமை, அறிவு, முயற்சி என்ற மூவகை ஆற்றலும் உள்ளவர் பெரியார் அவர்கள் நமக்குச் சொல்வன யாவும் நன்மை தரும்.

ஒழுக்கத்திலும் ஞானத்திலும் சிறந்த அந்தணர் ஒருவர் வீட்டில் இளைஞன் ஒருவன் பணிசெய்து வந்தான். அவன் நல்லொழுக்கமும் கீழ்ப்படியும் குணமும், சுறுசுறுப்பான போக்கும் உள்ளவன். ஒருநாள் அந்த அந்தணர் வீட்டுக்குச் சிலபெரியவர்கள் வந்தார்கள். சிறுவன் அவர்களுக்கு வேண்டிய பணிவிடைகளை ஒழுங்காகச் செய்தான். அவனுடைய பணிவையும் வேலைத் திறனையும் கண்ட பெரியவர்கள் அவனை நன்றாக வாழ்த்தினார்கள்.

அவர்கள் கடவுளின் பெருமையையும் அவரின் திருவிளையாடல்களையும்பற்றி உரையாடிய வேளையில் சிறுவனும் அவற்றைக் கேட்டு மனம் உருகினான். பெரியவர்கள் இறைவன் திருநாமத்தைச் சொல்லி உருவேற்றுதல் நல்ல பயன் தரும் என்று சிறுவனுக்குப் பழக்கினார்கள்.

சிறுவன் தன்னை வேலைக்கு வைத்திருந்த அந்தணரை வணங்கி விடைபெற்று ஊர்ப்புறத்தில் அடக்கமாக இருந்து யோகம்செய்து வந்தான். ஒருநாள் திருமால் அவனுக்குக் காட்சி கொடுத்து, ஆசிவழங்கி, அடுத்த பிறப்பில் பெரிய பக்தனாகுமாறு வரங்கொடுத்தார். சிறுவன் அடுத்த பிறப்பில் நாரதர் என்னும் பெரிய முனிவராகப் பிறந்து எந்தநேரமும் திருமால் நினைவாகவே பாடிக்கொண்டிருந்து பரமபதம் அடைந்தார்.

## கோபம் பொல்லாதது

ஆறுவது சினம் என்று ஔவையார் சொன்னார். கோபம் மனத்திலே எழுகின்ற ஒரு தீய குணம். கோபம் வரும்போது உடம்பு வரண்டு போகும். புத்தி நிலை தவறி விடும் கோபம் கொண்டவர். தான் செய்வதை அறியமாட்டாமல் மயங்குவர். கோபத்தினால் வருகின்ற அடி பிடி சண்டைகள் பல. அவற்றால் பெரிய ஆபத்துக்கள் உண்டாகும். அவை உண்டாகாமல் இருப்பதானால் கோபத்தை அடக்குதல் வேண்டும்.

முன்னொருகாலத்தில் அயோத்தியாபுரியில் அம்பரீஷர் என்றொரு பேரரசர் இருந்தார். அவர் ஏகாதசி விரதத்தை நியமத்தோடு அனுட்டித்து வந்தார். ஏகாதசி வேளையில் ஒன்றும் உண்ணாமல் இருந்து, அடுத்த நாள் துவாதசி வேளையில் சூரியன் உதிப்பதன் முன் உணவு கொள்ளுதல் வழக்கம். இவ்விதம் உணவு கொள்ளுதலைப் பாரணை என்று வழங்குவர். ஒருநாள் துருவாச முனிவர் என்னும் பெரியவர் துவாதசி வேளையில் பேரரசரிடம் வந்தார். வந்தவரை வரவேற்றுப் பாரணை செய்யுமாறு பேரரசர் அன்போடு கேட்டார். அதற்கிசைந்த முனிவர் அண்மையில் உள்ள சரயுநதிக்கு நீராடி வருவதற்குச் சென்றார். நீராடி வருவதற்குள் பாரணை செய் வேண்டிய நேரம் வந்துவிடவே, அம்பரீஷர் ஒரு துளசி இலையை மென்று நீரருந்தினர். கால தாமதமாகி மீண்ட முனிவர் தாம் வருவதற்குள் அவர் பாரணை செய்தமைக்குக் கோபித்துத்தம் தவவலிமை கொண்டு அம்பரீஷரைச் சபித்தார். அம்பரீஷர் முனிவரை வணங்கிச் சாபத்தை நீக்குமாறு பணிந்தும் அவர் கேட்கவில்லை.

★ அமிழ்தென்று பெயர் பெற்ற அருமைத் தமிழ் ★

உடனே அம்பரீஷர் தமது விரதப் பலனைக் கருதி விஷ்ணுவைத் தொழுதார். விஷ்ணு தம் பக்தன் மேல் இரங்கித்தம் சக்கராயுதத்தைப் பார்த்தார். உடனே சக்கராயுதம் எழுந்து முனிவரை மோதப் போனது. முனிவர் அஞ்சி மகாவிஷ்ணுவைத் தொழுதார். மகாவிஷ்ணு தம் பக்தருக்கு அபசாரஞ் செய்தவரைக் காக்க முடியாது என்று கூறினார். உடனே முனிவர் அம்பரீஷரிடம் சென்று சரண் அடைந்தார். அம்பரீஷர் சக்கராயுதத்தை அன்புடன் தொழுது அப்பாற் போகச் செய்து, முனிவரைக் காப்பாற்றினார்.

## ஈவது விலக்கேல்

ஒருவர் வேறொருவருக்கு ஏதாவது கொடுப்பதை இன்னுமொருவர் இடையில் வந்து தடுத்தலாகாது. கொடுப்பது புண்ணியம், தடுப்பது பாவம். தசரதர், கர்ணன், தமிழ் வள்ளல்களான குமணன், பாரி, அதிகமான், பேகன், காரி முதலானோர் பெருவள்ளல்கள். பிற்காலத்தில் சடையப்பர், அண்ணாமலைச் செட்டியார் முதலானவர்கள் வள்ளல்களாயிருந்தவர்கள். தன்னயம் மறுத்துப் பிறருக்குக் கொடுப்பது தர்மங்களுள் தலையாயது.

முற்காலத்தில் பலி என்னும் பெயர்பெற்ற வள்ளல் ஒருவன் இருந்தான். அவன் எவர் எதுகேட்டாலும் இல்லை என்னாமல் கொடுத்துவந்தான். அதனால் அவனை எல்லோரும் மாபலி என வாழ்த்தினார்கள். ஆனால் அவன் தேவர்கள் என்னும் இனத்தவரை நசுக்கிப் பயமுறுத்திவந்தான். அவனுடைய கொடுமையைத் தாங்க முடியாத தேவர்கள் விஷ்ணுவிடம் முறையிட்டார்கள். விஷ்ணு காசிபமுனிவர் வீட்டில் சிறிய உருவமுள்ள பிள்ளையாக அவதரித்தார். சிறிய வடிவினராய அவரை வாமனர் என வழங்கிவந்தார்கள். வாமனர் ஒருநாள் மாபலியின் அரண்மனைக்குச் சென்றார். மாபலி அவரை வரவேற்று உபசரித்தான். வாமனர் தாம் இருந்து தவஞ் செய்வதற்குத் தம் காலால் மூன்றடி நிலம் அளக்கவேண்டும் என்று கேட்டார். உடனே மாபலி தந்தேன் என்று கூறித் தாரைவார்த்துக் கொடுப்பதற்குத் தண்ணீர்க் கெண்டியை எடுத்தான்.

உடனே பக்கத்திலிருந்த சுக்கிராசாரியார் என்னும் குரு, மாபலியைத் தடுத்து, வந்தவர் வாமனர். தேவர்களுக்கு வாழ்வளிப்பதற்குக் கருதி உன்னைக் கெடுக்கப் பார்க்கிறார். நீ கொடாதே என்று தடுத்தார். அதுகேட்ட மாபலி சினந்து, பெரியவரே, குருவாகிய தாங்கள் இங்ஙனம் தடுத்தல் தகுந்ததாயில்லை என்றுகூறித் தாரைவார்க்கப் போனான். உடனே சுக்கிராசாரியார் ஒரு வண்டின் உருவம் எடுத்து கெண்டியின் துவாரத்தை அடைத்தார். இதை உணர்ந்த மாபலி கூரிய தர்ப்பையை எடுத்து வண்டை விலகுமாறு குத்தினான். வண்டின் ஒருகண் பொட்டையாயிற்று. அவன் தாரைவார்த்துக்கொடுத்ததும், வாமனர் மூவடி அளப்பதற்குக் கால் பெயர்த்து இரண்டு தாவினால் மூவுலகங்களையும் தாண்டி மூன்றாம் அடி வைப்பதற்கு இடம் எங்கே என்று கேட்டார். உடனே மாபலி முழந்தாள் மடக்கி குனிந்து கும்பிட்டு என் தலைமேல் வைக்கலாம் என்றான். வாமனர் மூன்றாம் அடியை அவன் முடிமேல் வைத்து அமிழ்த்தி அவனுக்கு மேலான பதவிகொடுத்தார் முன்னர் மூன்றடி கொடுப்பதைத் தடுத்த சுக்கிராசாரியார் ஒருகண் குருடராயினார்.

## கெக்கிராவை கண்ட மனிதர்



வடமத்திய மாகாணத்தில் ஒரு நாட்டுப்புற நகரமாய் விளங்கிய கெக்கிராவை என்னும் ஊர் பல பாகங்களை இணைக்கும் ஒரு அருமையான மையம். அந்த மையத்தின் இருதயம் போல விளங்கிய வியாபாரத் தாபனம் குரும்பசிட்டி சுப்பிரமணியம் சகோதரர் நடத்திய பெரிய நிறுவனம். வியாபாரம் கொள்வனவு விற்பனவு மொத்தமாகவும் சில்லறையாகவும் நடைபெற்ற விரைவு ஆயிரமாயிரமாகப் பணத்தைக் கண்டது. வந்த பணத்தின் ஒருபகுதி வருவார் போவார் தங்கி நின்று உண்டு உறங்கிப் போகவும் பயன் தந்தது. உல்லாசமாக ஒரு விடுதியில் நாள் தோறும் 'நூறுரூபாவுக்கும் கிடையாத வசதிகள் வாய்ப்புக்கள் அங்கே எவருக்கும் இலவசமாகக் கிடைத்தன. வியாபாரத் தாபனத்தோடு முதலாளியாரின் இல்லமும் இல்லத்தரசியும் வசித்தமையால் விருந்துபசாரம் தமிழ்ப் பண்பாட்டோடு கலந்திருந்தது. யார் எந்த நேரத்தில் அவ்வழிச் சென்றாலும் வேளைக்குரிய உணவு எல்லோருக்கும் காத்திருந்தது. வேறென்ன செய்யவேண்டும் என்று குறிப்பறிந்து உதவும் கொடைத்திறம் ஒரு பக்கம் வாருங்கள் என்று வரவேற்பதும், போய் வாருங்கள் என்று விடை கொடுப்பதும் சடையப்பவள்ளலின் அடையா நெடுங்கதவுடைய மனையின் பண்பாடு என்றால் கெக்கிராவையில் நாகமுத்தர் சுப்பிரமணியம் என்றால் குறைந்தவரா இல்லை! இல்லை பழகியநா, நகைச்சுவை இன் சொல்லும் என்றும் மறக்காதநா, காட்டுவழி பிரயாணஞ் செய்த களைப்புத்தீர கெக்கிராவையில் குரும்பசிட்டியார் வீடும் நிறுவனமும் அமைத்திருந்தனர்.

மில்க்வைற் தயாரிப்புகளை லொறிக்கணக்கில் வாங்கி விற்பனை செய்த ஒரு பெரிய நிறுவனம், காட்டுப்பகுதியிலிருந்து இலுப்பை விதைகளையும் லொறிக்கணக்கில் சேர்த்துக் கொடுத்தது. பழைய பட்டினப்பாலை கூறும் வர்த்தகத் திறமையை குரும்பசிட்டியார் கெக்கிராவையில் காட்டினர். இப்படியாக 1977 நிறுவனத்தைத் தரைமட்டமாக்கியது. சுப்பிரமணியத்தார் மண்ணாங்கட்டி நிலத்தில் வீழுந்து நொருங்கினாற் போல மண் கௌவவில்லை, றப்பர் பந்து போல எழும்பி யாழ்ப்பாணம் மீண்டு சண்டிலிப்பாயில் பெரியதொரு அரிசி ஆலையை நிறுவிப் புன்சிரிப்பும் பூரிப்பும் தவறாமல், மாறாமல் வர்த்தகம் செய்து வந்தார், பணிபுரிந்து வந்தார். செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல் என்றாற் போல வாழ்ந்து, தமது அறுபத்தெட்டாம் வயதில் இறைவன் தாளையடைந்தார். அவர் தருமம் வாழ்க. நல்லவர் பெரியவரான அவர் பெயர் நிலைப்பதாகுக.

## சுகாதார வினு விடை "நுரையீரல் தரும் விடை"

1. மனிதனின் அருவருப்பான செயல் யாது?
புகைத்தல்

2. புகைக்க உதவியான இயமன்கள் எவை?
பீடி, சுருட்டு, சிகரட்,

3. புகைத்தலால் வ்யமிழப்பவை யாவை?
கண், நுரையீரல், நரம்புகள்.

4. புகையிலையைப் பழக்கியவர் யாவர்?
ஒல்லாந்தர் (1658...1795)

5. மிகவும் அநாகரிகமான பழக்கம் எது?
புகைத்தல்.

6. புகைப்பவரை வருத்துவன யாவை?
சளி, வரட்டு இருமல்.

7. இருதயத்துடிப்பைக் கெடுப்பது எது?
புகைத்தல்.

8. புகையிலையின் உற்பத்திகள் எவை?
மூக்குப்பொடி, புகை.

9. புகையிலை இறுதியில் தருவன யாவை?
காசம், புற்றுநோய்.

10. மக்களின் மூளையைக் கெடுப்பது எது?
புகைத்தல்.

## பொய்கைக்கரையில் வினுவும் விடையும்

1. பெரியவராதல் எதனுல்?
தவத்தால்.

2. முனிவருக்குப் பெருமை தருவது எது?
தவம்:

3. ஒருவர் அறிவாளியாவது எதனுல்?
சாதுக்கள் கூட்டத்தால்.

4. மனிதத்தன்மையைத் தருவது எது?
நல்லொழுக்கம்.

5. மனிதர் இழிவடைவது எதனுல்?
தீயொழுக்கத்தால்.

6. இல்வாழ்வானுக்கு உதவி யாவர்?
நல்லற மனைவி.

7. நோயாளிக்கு உறவு யாவர்?
மருத்துவன்.

8. நல்ல மரணத்துக்கு உதவி யாது?
ஈதலாகிய அறம்.

9. புராதனமாயிருந்த தருமம் எது?
தன்னைக் காத்தல்.

10 எமக்கு அமுதம் என்பது எது?
பசுவின் பால்.

## கபடமற்ற தர்மமே துணைபுரியும்

நேர்மையான நல்ல எண்ணத்துடன் எல்லாப் பிராணிகளிடத்தும் அன்புடன், எல்லாருடைய நன்மைக்காகவும் செய்வதே கபடமற்ற தர்மம்.

கோபமில்லாதவனும் கடவுளிடம் ஊன்றிய மனத்தினையுடையவனும், கபடத்தை அறவே நீத்தவனும், குரூரமான சொற்களைத் தவிர்த்தவனும், சுத்தநடத்தை உள்ளவனும், ஆசை முழுவதும் நீக்கியவனுமான நல்லவனே கடவுளின் திருநாமத்தை உச்சரித்து ஈடுபடத் தகுதியும் சக்தியும் கொண்டவன்.

திருச்சிற்றம்பலம்

ஒல்லையாறி உள்ளமொன்றிக் கள்ளம்ஒழிந்து வெய்ய
சொல்லை யாறித்தூய்மை செய்து காமவினையகற்றி
நல்லவாறே யுன்றனும நாவினவின் றேத்த
வல்லவாறே வந்துநல்காய் வலிவலம் மேயவனே.

— திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர்

திருச்சிற்றம்பலம்

## குறும்புக்கவி

கவிஞர் சிலர் சாமர்த்தியத் திறனுல் பழைய கவிஞர் போலப் பாட்டுக்கள் பாடுவது வழக்கம். அந்தப் பழக்க விசேடத்தாலே அவர்கள் செய்த பாடல்கள் பல இடைச்செருகலாகவும் உள்ளன. வெள்ளியம்பலவாணர் என்பார் இங்ஙனம் பாடுந் திறமை பெற்றிருந்தமையால் அந்த இடைச்செருகல்கள் வெள்ளி பாடல்கள் என வழங்குவதும் உண்டு.

ஒருசமயம் கல்விப்பணிப்பாளர் அருள் நந்தி அவர்கள் இலக்கிய ரசிகர் கூட்டமொன்றில் கனகிபுராணப் பாட்டொன்றை வெகுவாக ரசித்துச் சபையோரையும் ரசிக்க வைத்தார். சபையில் இருந்த இரசிகர்களுள் ஒருவர் நன்ருக ரசித்ததோடு வெம்பி வெம்பி ஆனந்தக்கண்ணீர் வடித்தார். அவருடைய மெய்ப்பாட்டைக் கண்ட உளநூற்புலமையாளனுய அருள்நந்தி என்னப்பா என்று விசாரித்தபோது, ரசிகன் ஐயா இது நான் பாடிய பாடல் என்று விம்மினுர். அவர் வேறு யாருமல்லர், நீர்வேலி நொத்தாரிசு சிற்சபேசன் அவர்களேதான்.

ஒருசமயம் இரவீந்திரநாத் தாகூர் பழைய மரபில் பானுசிம்சன் என்னும் புனைபெயரில் ஒரு கவிதை நூலை வெளியிட்டார். அதனை உண்மையான பழைய கவிதை என எல்லோரும் கருதியிருந்தனர். ஜேமனி தேசத்தில் ஒரு பெரியவர் அந்த நூலை ஆய்வுசெய்து கலாநிதிப் பட்டமும் பெற்றுக்கொண்டார். நாளடைவில் அக்கவிதை தாகூரின் குறும்புக்கவி என்பது வெளியாயிற்று

## உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

படிப்பாற்றல் வாய்ந்த வடமராட்சியிலே நூற்றிருபதாண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப் பெற்ற மகளிர் கல்லூரியில் வருடந்தோறும் வித்தியாரம்ப கருமம் ஏடு தொடக்கும் முறையில் நன்கு நடைபெறுவதற்கு தாராளமாக ஏடு கொடுத்துதவும் தொழிலதிபர் கனகராசா அவர்களை, அதிபர், ஆசிரியர்கள், அபிமானிகள் வாழ்த்துகிறுர்கள்.

## பழையதும் மருவியதும்

1. அசைகிறது ... அசையுது
2. அஞ்சுகிறது ... அஞ்சுது
3. அணைகிறது ... அணையுது
4. அத்தைமகன் ... அத்தான்
5. அந்தநாள் ... அந்நாள்
6. அப்புகிறது ... அப்புது
7. அமர்கிறது ... அமருது
8. அரளி ... அலரி
9. அருமருந்தன்ன ... அருமந்த
10. அலைகிறது ... அலையுது
11. அவாவுகிறது ... அவாவுது
12. அவிரி ... அவுரி
13. அழைக்கிறது ... அழைக்குது
14. ஆகிறது ... ஆவுது
15. ஆகும்பொழுது ... ஆம்போது
16. ஆடுகிறது ... ஆடுது
17. ஆயிற்று ... ஆச்சு
18. ஆள்கிறது ... ஆளுது
19. ஆற்றூர் ... ஆற்றை
20. இசைகிறது ... இசையுது
21. இடைகழி ... இரேழி
22. இந்தநாள் ... இந்நாள்
23. இமைக்கிறது ... இமைக்குது
24. இரைகிறது ... இரையுது
25. இன்னவண்ணம் ... இன்னணம்



## இந்த ஆண்டுக்கு இன்னொரு ஏற்றம்

இமயசோதி என்று அடியார்கள் போற்றும் சுவாமி சிவானந்தர் அவர்கள் தமிழ்நாட்டில் அப்பைய தீட்சிதர் மரபில் வந்த மகான். அவர் 1887ல் தோன்றியதால் 1987 நூற்றாண்டாக மலர்கிறது. எனவே மில்க்வைற் செய்தி வழக்கம் போலன்றி இன்னும் மேலதிகமான சிவானந்த செந்நெறி பரப்பி மலரும்,

அன்று வெங்கு ஐயர் பார்வதி தம்பதிகள் 8-9-1887ல் பெற்றெடுத்த குப்புசுவாமி பரணியிற் பிறந்தவர். அவர் தரணியை ஆள்வர் என்பது உறுதியாயிற்று. அவர் ஆண்ட நிலம் ஆன்மிகதரணியேயாகும். ஆன்மிகதரணி அன்பர் உள்ளம் நிரம்பிய அருளாளர். மகாகவி சுப்பிரமணிய பாரதியாருக்குப் பள்ளித்தோழனாய குப்புசுவாமி எட்டயபுரத்தில் ஆரம்பக்கல்வி பயின்றபின் திருச்சி தஞ்சை ஆகிய இடங்களில் கல்வி பயின்று மருத்துவப் பட்டம் பெற்றார். சிலகாலம் மலேசியாவில் மருத்துவப் பணி செய்து நற்பெயர் பெற்ற அவர் ஹடப்பைச் சித்தரின் "ஜீவப்பிரம்ம ஐக்கிய வேதாந்த இரகசியம்" என்னும் நூலைப் படித்ததும் புதிய புருடரானார். இந்தியா திரும்பி இமயம் சேர்ந்தார். அங்கே 1924ல் விசுவானந்த சுவாமியிடம் சந்நியாச தீட்சை பெற்று சிவானந்தர் ஆயினார்.

## ஈறு வேறுபட்டாலும் பொருள் வேறுபடாதவை

1. அகடு ... அகடம்
2. அரங்கு ... அரங்கம்
3. அரவு ... அரவம்
4. இன்பு ... இன்பம்
5. கதவு ... கதவம்
6. குரவு ... குரவம்
7. குன்று ... குன்றம்
8. கூற்று ... கூற்றம்
9. சகடு ... சகடம்
10. சங்கு ... சங்கம்
11. சாந்து ... சாந்தம்
12. தளவு ... தளவம்
13. துளவு ... துளவம்
14. துன்பு ... துன்பம்
15. நஞ்சு ... நஞ்சம்
16. நறவு ... நறவம்
17. நெஞ்சு ... நெஞ்சம்
18. நோக்கு ... நோக்கம்
19. புறவு ... புறவம்
20. பெருக்கு ... பெருக்கம்
21. மட்டு ... மட்டம்
22. மன்று ... மன்றம்
23. முரசு ... முரசம்
24. துவை ... துவையல்
25. தொடை ... தொடையல்
26. பிழி ... பிழியல்
27. பொரி ... பொரியல்
28. மின் ... மின்னல்
29. வளை ... வளையல்
30. விண்டு ... விண்டல்

## ஜெபர்சன் சொன்ன புத்திமதி

1. இன்று செய்யக் கூடியதை நாளைக்கெனப் பின் போடாதே
2. நீயே செய்யக் கூடியதற்குப் பிறரை ஏவல் கொள்ளாதே
3. பணம் வருமுன் செலவுகளை உண்டாக்காதே
4. உனக்கு வேண்டாததை மலிவு எனக்கண்டு வாங்காதே
5. அகந்தை என்பது பசி தாகம் குளிரில் கொடியது
6. குறைவாக உண்டேன் என்று மனம் வருந்தாதே
7. வேண்டுமென்று செய்தவை துன்பந் தருபவையாகும்
8. கோபம் வந்தால் உடனே பத்துவரை எண்ணிய பின் பேசு

★ வானுர்ந்த பொதியின் மிசைவளர்ந்த தமிழ் ★



## GOD AND MAN

1. God leads man while he is misleading himself.
2. If we would understand God, we must renounce our egoistic and ignorant human standards, or else enoble and universalise them,
3. If God did not take upon Himself the burden of tempting men, the world would very soon go to perdiction.
4. Man becomes God, and all human activity reaches its highest and noblest when it succeeds in bringing body, heart and mind into touch with spirit.

### தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை

மரம் நாட்டுவதால் உண்டாகும் பலவித நன்மைகளையும் பேசிய மில்க்வைற் தொழிலதிபர், பசுமை கண்ணுக்கும், சுவாசத்துக்கும், நோய் நீக்கத்திற்கும் பயன் தருவது என்றும், மரங்கள் பெரிதாக வளர்ந்தால் நல்ல நிழல் தருவதோடு, நல்ல வருமானத்தையும் தரும். ஆதலால் மரங்களை ஏராளமாக நடுவோம் வாருங்கள் என்று அழைத்து மரக்கன்றுகளையும் வழங்கினர். மரங்கள் பெரு முதலாகும்.

### யாழ்ப்பாணம் கன்னியர் மடம்

தாராள மனப்பான்மை வாய்ந்த அதிபர் ஆசிரியர்கள் மில்க்வைற் வெளியிடும் சைவப்பிரசுரங்களையும், செய்தித்தாளையும் மனப்பூர்வமாகக் கேட்டு வாங்கிப் பிள்ளைகளுக்கு விநியோகித்து நல்லறிவு கொளுத்துகிறார்கள். அவர்கள் நன்றி தெரிவிக்கும்போது நாம் அவர்களை முதலிற் பாராட்டுகிறோம்.

## 1987 ஜனவரி மாத நிகழ்ச்சிகள்

(அட்சய மார்கழி 17 – தை 18)

| | | | |
|---|---|---|---|
| 1. | வியாழன் | ... | 1987 வருடப் பிறப்பு<br>பொன்னாலை வரதர் கொடி |
| 6. | செவ்வாய் | ... | இரவு 10-10 அட்டமி |
| 7. | புதன் | ... | இரவு 10-05 வரை அட்டமி |
| 8. | வியாழன் | ... | இரவு 10-30 வரை நவமி |
| 9. | வெள்ளி | ... | பொன்னாலை வரதர் தேர் |
| 10. | சனி | ... | கார்த்திகை விரதம்<br>சுவர்க்கவாயில் ஏகாதசி விரதம் |
| 11. | ஞாயிறு | ... | கெர்ப்போட்ட முடிவு |
| 12. | திங்கள் | ... | பிரதோஷ விரதம் |
| 14. | புதன் | ... | தைப்பொங்கல்<br>தமிழ்த் தைமாதப்பிறப்பு<br>பூரணை விரதம் |
| 15. | வியாழன் | ... | பட்டிப்பொங்கல் |
| 17. | சனி | ... | ஆயிலியம் |
| 22. | வியாழன் | ... | பகல் 12-36அட்டமி |
| 23. | வெள்ளி | ... | அட்டமி நவமி |
| 24. | சனி | ... | நவமி பகல் 9-38 வரை |
| 25. | ஞாயிறு | ... | ஏகாதசி விரதம் |
| 27. | செவ்வாய் | ... | பிரதோஷ விரதம் |
| 29. | வியாழன் | ... | அமாவாசை விரதம் |
| 30. | வெள்ளி | ... | மகாத்மா மறைவு நாள் |

### பண்டத்தரிப்பில்

பல்வேறு பணிகளாலும் படிப்பு வசதிகளாலும் சிறந்து விளங்கும் பண்டத்தரிப்பில், பங்குத்தந்தை அவர்களை வணங்கி, அங்கு வந்திருந்த விவசாய உத்தியோகத்தர்கள் பெரியவர்களுக்கு வந்தனம் கூறி, நாட்டில் ஒற்றுமை நிலவ வேண்டும், அபிவிருத்தி ஓங்க வேண்டும் என்றெல்லாம் ஆரம்பித்த மில்க்வைற் தொழிலதிபர் மழையைப் பயன்படுத்தல், மண்வளம் பெருக்குதல், மரம் நாட்டுதல் என்பன பற்றிப்பேசி, மரக்கன்றுகள், விதைகள், விவசாயம் சம்பந்தமான பிரசுரங்கள் என்பனவெல்லாம் உதவினர். உதவிக்கரம் நீளுதலே பெரிய மனிதர் கடமை.

### செல்வி ஜெயபத்மினி சின்னத்துரை

தமிழர் கண்ட கலைகளுள் ஒன்றான நடன நாட்டியக் கலை இன்று மறுமலர்ச்சி பெற்று மக்களை வெகுவாக மகிழ்வித்து வியாபகமாகும் போது, செல்வி அவர்கள் செய்யும் தொண்டினை நாம் வெகுவாகப் பாராட்டுகிறோம். நர்த்தககவித்தகி எனும் பட்டம் இவருக்குத் தகும் என்று புகழ்ந்து வாழ்த்துகிறோம். இவர் பணி வெல்க என்னும் கருத்தமைய மில்க்வைற் தொழிலதிபர் அன்று செல்வியைப் பாராட்டியதோடு அவரின் நடன நிகழ்ச்சிப் பதிவேடு ஒன்றை வாங்கிப் பலரும் பார்க்க வழங்கினர்.

★ தானியல் சிறப்புறும் தனித் தமிழ் மொழி ★

# இம்மாதத்தில் நினைவுக்குரியவர்கள்

சிறுப்பிட்டி வைரவநாதர் தாமோதரம்பிள்ளை, ஒரு தமிழ்தாதா. அவர் தந்தவை பழைய நூற்பதிப்புகள். தொல்காப்பியம் சொல்லதிகாரம், வீரசோழியம், கலித்தொகை. சூளாமணி முதலான பழைய நூல்களை ஏடுகளிலிருந்து படித்து பரிசோதித்து ஒப்புநோக்கி, பிழை திருத்தி அச்சிலேற்றியவர். அன்றி, சென்னைப்பல்கலைக் கழகத்து 1857 ஆம் ஆண்டின் முதற்பட்டதாரி. தினவர்த்தமானி ஏட்டின் ஆசிரியர் சேர். இராமநாதன் அவர்களை உருவாக்கிய மூவர் பெருமக்களுள் ஒருவர். மற்றைய இருவரும் றிச்சாட் மோகன் என்னும் சட்ட நிபுணரும், தாய்மாமன் சேர். முத்துக்குமாரசுவாமி அவர்களுமாவர்.

❊ ❊ ❊

கீர்த்திஸ்ரீ இராசசிங்கன் பெயருக்கேற்பக் கண்டியை ஆண்ட நாயக்க தமிழ் மன்னர்களுள் ஒருவனுவன் இவன் 1747 முதல் 1780 வரை ஆண்ட காலத்தில் முன்னேசுவரத்தைப் புனரமைப்புச் செய்து, சோழநாட்டுச் சிற்பிகளுக்குச் சிறப்புச் செய்து, கோயிலுக்குப் பெருமளவில் வருமானம் செப்பேட்டில் எழுதிக்கொடுத்த ஆண்டு 1753, நான் ஆவணி 14.

❊ ❊ ❊

தென்தமிழ் நாட்டில் வெள்ளைக்காரரையும் அவர் தம் கொம்பனி ஆட்சியையும் அஞ்சாது எதிர்த்துத் தமிழ் வீரம் காட்டிய வீரபாண்டியன் கட்டப்பொம்மன்.

❊ ❊ ❊


இலங்கைக்கு சுதந்திரம் வேண்டும், பல்கலைக்கழகம் வேண்டும் என்றெல்லாம் எமது தேவைகள் என்ற தலைப்பில் பேசியும் எழுதியும், இலங்கைத் தேசிய மகாசபையை ஆரம்பித்து முதல் தலைவராயிருந்தவரும், இலங்கையருள் முதன் முதலில் (C.C.S.) என்னும் பெருஞ்சேவைப் பரீட்சையில் தேறியவரும், சட்டசபை, சட்டநிருபண சபைகளின் ஒளிவிளக்காயிருந்தவரும், தமிழ்ப்பற்றுமிக்க வருமான சேர். பொன்னம்பலம் அருணசலம் அவர்கள், சேர் இராமநாதன் அவர்களின் அருமைத்தம்பியாராவர்.

❊ ❊ ❊

இல்ங்கைப் பல்கலைக்கழகத்துப் பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களையும், வித்துவான் கார்த்திகேயன் அவர்களையும் அண்ணாமலையில் உருவாக்கிய அறிஞர் கந்தசாமி அவர்களின் தமிழாசான் ஒருவர் தமிழ்ப் பேரறிஞர். அவர்தான் சோழவந்தான் அரசஞ் சண்முகனார் என்னும் இலக்கிய இலக்கண வித்தகர்.

❊ ❊ ❊

பாரதநாட்டில் றெயில்வேப் பகுதி உள்நாட்டு அரசியல் முதலிய துறைகளின் மந்திரியாராயிருந்து, கடும் நேர்மைக்குணம் வழிகாட்ட பிரதமராய், நாட்டை நன்னெறிப்படுத்திய பரமகட்டையர் லால்பகதூர் சாஸ்திரியாராவர்.



ஸ்ரீ இராமகிருஷ்ண தேவரின் சிரேஸ்டசீடராய், அமெரிக்கா முதலிய நாடுகளில் பாரத தர்மம் பேசிய இராமகிருஷ்ண மடம் தாபித்து உலகப்புகழ் பெற்ற உத்தமர் சுவாமி விவேகானந்தர்.

❊ ❊ ❊

சுன்னுகம் முத்துக்குமார கவிராயர், நாகநாத பண்டிதர், ஆறுமுகநாவலர் முதலான பெரியவர்களிடம் படித்து முறுக்கேறிய விவேகி குமாரசுவாமிப்புலவர் கூரிய சீரிய அறிவினர், ஆழ்ந்த அகன்ற கல்வியினர். அகராதி தொகுத்ததோடு, புலவர் சரித்திரமும் எழுதியவர். கண்டனமெழுதுவதில் வல்லவர், பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களின் தமிழாசிரியர். சேர் இராமநாதன் அவர்களின் மகளை மணந்த மருகராய்ப் பரமேஸ்வராக் கல்லூரி அதிபராய், கலாநிலையத் தலைவராய், ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கப் பெரியவராய், சகுந்தலை வெண்பா, கதிர்காமநாதன் திருப்பள்ளி எழுச்சி முதலியன பாடியவராய், வரலாற்றுக் கட்டுரைகள் எழுதியவராய், தமிழ் விழாக்கள் நடத்தியவராய், இசைத்துறையில் ஈடுபாடு மிக்கவராய், தமிழ்நாட்டில் சொர்ண்ம்மாள் நினைவுப் பேருரை நிகழ்த்தியவராவர். சைவசித்தாந்தப் பெருமன்றத்து பொன்விழாப் பொலிவில் தலைவராய், 1934 முதல் 1947 வரை காங்கேயன் துறைப் பிரதிநிதியாய், மீள 1952 முதல் 1956 வரை அங்கத்தவராய், மந்திரியாயிருந்த பெரியவர் B.A.B.L, F.R.E.S.; கலாநிதி முதலிய பட்டங்கள் சூட்டப்பெற்ற வித்தகர் சுப்பையா நடேசபிள்ளை ஆவார்.

❊ ❊ ❊

சைவப்பெரியார் என்று சொன்னல் இன்றும்தான் புகழ் மணக்கப் புகழ்நிறுவிப்போன பெரியவர் சு. சிவபாதசுந்தரம் அவர்கள். திருச்சி, சென்னை முதலிய இடங்களில் பயின்றதோடு, வார்கடை சுவாமி என்பவரின் வான்முறையில் தர்மந்தெரிந்து தெளிந்த அறிவினர். வற்றிய உடம்பினர், வற்றுத உள்ளத்தவர், உவகையோடு பிறருக்குச் சைவம் கற்பித்தவர், விக்ரோறியாக் கல்லூரி அதிபர், சைவபோதம் முதலான நூல்கள் எழுதியவர், கண்டனங்கள் தீட்டிய தர்க்க நூலறிஞர், சைவாதீனங்களாற் பாராட்டப்பெற்றவர், நல்லதொரு ஞானபரம்பரையை விட்டுச் சென்றவர்.

★ தழைத்தினி தோங்கும் தண்டமிழ் மொழி ★

இற்றைக்கு அறுபதாண்டுகளுக்கு முன் பின்னுக ஆரம்பவகுப்புகளிற் படித்த பிள்ளைகள் ஜூன் மாதம் மூன்றும்நாள் விடுதலை வழங்கப்பெற்றுப் பாடசாலைக் கொடியின்கீழ் அணியணியாக முற்றவெளிக்குச் சென்று, அங்கே அமைந்த தட்டிப்பந்தல் அலங்காரங்கண்டு, வெள்ளைக்காரன் கொடியின்கீழ் அணிவகுத்துக் கீதம்பாடி மன்னரை வாழ்த்தி இனிப்புப் பொட்டலம் பெற்று மீளும் மகிழ்ச்சி பெரிது. ஐந்தாம் ஜோர்ச் மன்னர், விக்ரோறியா மகாஇராணியின் மைந்தர் ஏழாம் எட்வேட் மாமன்னனின் இரண்டாம் மைந்தன். இவர் 6-3-1910 ஆம் நாளில் அரசரானவர். பிரித்தானியாவில் தொழிற்கட்சியின் தோற்றம், பெண்களுக்கு வாக்குரிமை, அயர்லாந்து அரசின் உதயம், முதலாம் உலகப் போர் முதலியவற்றைக் கண்டவர். தம் அரச குடும்பம் 1917 முதல் வின்சர் மரபு எனப் பிரகடனஞ் செய்து 1932 முதல் B. BC. வானொலியில் பொதுமக்களுக்கு உரைத்துவந்தவர்.

❊ ❊ ❊

அந்தக்காலத்தில் சரவணமுத்து குடும்பத்தில் நான்கு, ஐந்து பேர் சிறப்புப்பெற்றவர்கள். சரவணமுத்து சகோதரருள் ஒருவர் மனைவி நேசம், முதல் அரசாங்க சபையில் கொழும்புத் தொகுதியில் தெரியப்பெற்ற பெண் பிரதிநிதியாவர். தமிழருள் ஆண்களேயன்றிப் பெண்களும் பெருமைக்குரியவராயிருந்த காலம், ஒரு பொற்காலம்.

❊ ❊ ❊



பி. எஸ். என்றால் மாகாண சத்திர சிகிச்சை அதிகாரி. இந்த இரண்டு எழுத்துக்களும்ஒரு பெரியவரின் பெயராயே அமைந்து நீண்டகாலம் நிலவ வைத்திய சேவையும் செய்தவர் சி. சுப்பிரமணியம் என்னும் வள்ளலாவர்.

❊ ❊ ❊

சொற்கலைப் புலவர் என்று பட்டம் பெற்றுச் சொல்லியல் வரலாறு முதலிய துறைகளில் நல்ல ஆராய்ச்சி செய்த வணக்கத்துக்குரிய ஞானப்பிரகாச சுவாமிகள், மானிப்பாயில் தோன்றி அச்சுவேலியில் வளர்ந்து, திருநெல்வேலியிலிருந்து தமிழுலகமறியத் திருப்பணி புரிந்தவர்.

வங்கம் தந்த வீரசிங்கங்களுள் சுபாஸ் சந்திரபோஸ் சுதந்திர தாகம்கொண்டு வெள்ளையருக்குப் பேதி மருந்து கொடுக்காமலே வயிற்றைக் கலக்கிய வீரன்.

❊ ❊ ❊

வின்சன் சேர்ச்சில் இந்தியா சுதந்திரம் பெறுவதைப் பின்போட்டும், வெறுத்தும் கொண்டதைத் தவிர மற்ற வழிகளில் மாமேதை, நல்ல ஆங்கிலப் பேச்சாளன், எழுத்தாளன். துரும்பு, பஞ்சு முதலியவற்றுக்கும் வீர மூட்டக்கூடிய வகையில் முழக்கஞ்செய்த வீரன். ஹிட்லரின் இனவொதுக்கல் பைத்தியத்துக்கு நல்ல பாடம் கற்பித்தவர்களுள் ஒருவர்.

## ஆனைக்கோட்டைக் கிழார்

பழந்தமிழ் நாகரிக அகழ்வாராய்ச்சி தமிழ்நாட்டில் ஆதித்தநல்லூரில் அமைந்த வகையில், அண்மையில் ஈழத்திருநாட்டின் வடபாலமைந்த ஆனைக்கோட்டையிலும் அமைந்த வண்ணம் கண்டுபிடிக்கப் பெற்றது. ஆனைக்கோட்டை ஊருக்குப் பெருமை தந்த பெரியவர்கள் வரிசையில் சட்டப்பேரறிஞர் பட்டுச்சட்டைக்காரர், மூதவை உறுப்பினர் நடேசன் அவர்களும் ஒருவர். அவர் 11-4-1904 இல் தோன்றி ஆரம்பக்கல்வி பயின்று லண்டன் மற்றிக்குலேசன் பரீட்சையில் சித்தியெய்திய போது, அவருக்குப் பருத்தி புடைவையாகக் காய்த்தது. அவர் தமிழும் ஒரு பாடமாக எடுத்தபோதிலும் தவறுதலாக லத்தீன் பாடத்தில் சித்தியெனச் சான்றிதழ் கிடைக்கவே, அது வரப்பிரசாதம் எனக் கருதிய அவர் விரைவில் அம்மொழியைக் கற்றுத் திறமை பெற்று லண்டன் சென்று லிங்கன் நிலையத்தில் சீமை அப்புக்காத்தர் என்னும் பரிஷ்டரானார். நாட்டுக்கு மீண்ட அவர் இடதுசாரிப் போக்குள்ளவராய்க் கொழும்பில் சட்டத்துறையில் மெத்தப்பிரகாசித்து வந்தார்.

சுதந்திர இலங்கையில் அமைந்த அரச மன்றங்களுள் மேற்சபை உறுப்பினராகத் தெரியப்பெற்று நீண்டகாலம் அச்சபையை அலங்கரித்து வந்தார். தமிழருக்காக நல்ல முறையில் குரல் கொடுத்து வந்த அவர் எக்கட்சியையும் சாராதவராயிருந்தார். சட்டத்துறையில் மெத்தக்கடினமான சிக்கலான வழக்குகளையும் இலேசாக அணுகி நீதியைக் கண்ட பெருமை அவருக்குரியது. சட்டத்துறையில் உழைத்துப் பொன்விழாப் பொலிவு கண்ட புண்ணியர், ஆயிரம் பிறையும் கண்டு அமரரானவர். தாவரவுணவு இலை தழை காய் கனி என்பன மனிதனை வாழ வைப்பதற்குப் போதுமானவை எனக்கண்டு நீண்டகாலம் நோயின்றி வாழ்ந்து காட்டியவர். அவர் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

## தெல்லிப்பழை பழைய சைவவித்தியாசாலை

தெல்லிப்பழை சைவவித்தியாசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணுக்கர்கள் பெருமளவில் மரம்நாட்டும் பணி செய்வதற்கு உதவிசெய்தும், உற்சாகமளித்தும் பேசியும் பணிபுரிந்த தொழிலதிபர் கனகராசா அவர்களை எல்லோரும் நன்கு பாராட்டியுள்ளார்கள்.

★ என்றும் இளமை குன்றுது இலங்குந் தமிழ் ★

## அளவெட்டி சின்னப்பு அமரரானார்



சின்னப்பு தம்பதிகள்

அளவெட்டியில் பிறந்து மொழி பயின்று கும்பழா வளவப் பிள்ளையாருக்கு ஆட்பட்டு, மலேயா சென்று உத்தியோகம் பார்த்துக் குபேரசம்பத்துக்கு ஆளான கணபதிப்பிள்ளை, சின்னப்பர், தாம் பெற்ற செல்வத்தை வசதியற்ற மக்களுக்கு வாழ்வளிப்பதில் ஆண்டு தோறும் அரிசி, புடைவை, வெண்பொற் காசு அள்ளிக் கொடுத்துப் புகழ் பெற்றவர். இவர் 98 ஆண்டுகள் வாழ்ந்து 1986 ஆம் ஆண்டின் டிசம்பர் வரை சுகதேசியாயிருந்தவர். வாரந்தோறும் மில்க்வைற் தொழிலதிபருக்குக் கடிதம் எழுதிய இவர், தமது தர்மப் பணிகள் கிரமமாக நடைபெறுவதைக் கண்காணிப்பதற்கும் அளவெட்டியிற் செயற்குழு அமைத்துள்ளளார். இவர் திரு. மாணிக்க இடைக்காடருக்குப் பெண் கொடுத்த மாமனாராவர்.

## நாவற்குழி மகாவித்தியாலயத்தில் முப்பெரும் பணிகள்

நாவற்குழி மகா வித்தியாலயத்தில் 12-11-86 புதன் கிழமை காலை தொடக்கம் முப்பெரு விழாக்கள் நடைபெற்றன. மகாவித்தியாலயச் சுற்றுமதிலுக்கான அத்திவார விழா வட்டாரக் கல்வியதிகாரி தங்கராசா அவர்கள் தலைமையிலும், திறந்தவெளி அரங்கின் அடிக்கல் நாட்டு விழா விற்பனைப் பிரதி ஆணையாளர் கணேசநாதன் அவர்கள் தலைமையிலும், மரம்நாட்டுவிழா தொழிலதிபர் கனகராசா அவர்கள் தலைமையிலும் கோலாகலமாக நடைபெற்றன. அதிபர், ஆசிரியர்கள், மாணுக்கர்கள், அபிவிருத்திச் சபையினர், பழைய மாணுக்கர் பலர் கூடியிருந்து சிறப்பித்தனர்.

## வாழவைக்கும் வாழை

கலைவாணி சனசமூக நிலையத்தவர் மத்தியில் பேசிய தொழிலதிபர் கனகராசா அவர்கள், முப்பது ஆண்டுகளுக்கு முன் திருநெல்வேலி தொடக்கம் உரும்பராய் வரைக்கும் சாலையோரமாக இருபக்கங்களிலும் நெருக்கமாகப் பசுமையாகத் தழைத்துப் பயன்தந்த வாழைத் தோட்டங்களை இன்று பார்க்க முடிவதில்லை என்று வருத்தந் தெரிவித்தார். வாழைக்குலை களவுபோனதாக அந்தக்காலத்தில் எவரும் முறையிட்டதாகத் தெரியவில்லை. பிறர்பொருளைத் தீண்டாமையே தீண்டாமை என்றெல்லாம் சுவையாகப் பேசினார்.

## காரைநகர் பலநோக்குக் கூட்டுறவாளர்

இன்று நாம் நாட்டும் மரங்கள் இந்த இடத்தைச் சோலையாக்குதல்வேண்டும் என்று கூறியவாறு அங்கே பலவித மான மரங்களையும் நடுவதற்கு தொழிலதிபர் கொடுத்து வாழ்த்தினார். பேராசிரியர் கணேசலிங்கம் அவர்கள் வேப்பமரத்தில் கொண்டுள்ள அபிமான ஆராய்வு பெரிது என்றும், வேம்பு தலைசிறந்த கிருமிநாசினி என்றும் அதனை நாம் பரவலாக நட்டுப் பொருளாதார மேம்பாடு அடைதல்வேண்டும் என்றும் பேசினார்.

## புலோலி வட இந்துமகளிர் கல்லூரியும் மெதடிஸ்த கல்லூரியும்

புலோலி வட இந்துமகளிர் கல்லூரியில் மரம்நாட்டும் பணி பெருமளவில் நடைபெறுவதற்கு உதவிய மில்க்வைற் தொழிலதிபரை உதவித்திட்டப் பணிப்பாளர் A. N. S. திருச்செல்வம் நன்கு பாராட்டியுள்ளார். மாணிக்கவாசகர் முன்னாள் விவசாய அதிகாரி மதியாபரணம்.

## பலாலி ஆசிரிய பயிற்சியாளர் மத்தியில்

கதிர் நூல் வெளியீட்டுவிழாவில் விஞ்ஞான உலகில் விவசாயத்துக்கும் புதிய முறைகள் புகுதல்வேண்டும், விளக்கநூல்கள் வெளிவருதல் வேண்டும். நல்ல மகசூல் பெறும் வழியைப் பழகுதல்வேண்டும். குப்பையிலே கோடிபொன், கூட்டுப்பசளை நாட்டுக்கு நல்லது. பழவகை பன்மடங்கு பெருகுதல் வேண்டும். பழங்களை ஏற்றுமதி செய்தல்வேண்டும். கால்நடை, கோழிவளர்ப்பு, குறுகிய காலப்பயிர் என்பன யாவும் எமக்கு இன்றியமையாதன என்றெல்லாம் தொழிலதிபர் கனகராசா ஆலோசனை கூறினார்.

## பெரியபுலம் பாடசாலையில்

பெரியபுலம் பாடசாலையில் நாவலர் நினைவுநாட் கூட்டத்தில் விருந்தினராகப் பங்குபற்றிய தொழிலதிபர் நாடெங்கும் தீங்கில்லாத வழியில் யோகாசனம் பழகுதல் பாடவகையில் இடம்பெறவேண்டும் என்றும், சைவசமயத்தவர் கட்டாயமாகத் தீட்சை பெற்று ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கவேண்டும் என்றும் பேசினார்.

## முதுபெருங் கிழவனார்

ஆறுமுகநாவலர் அவர்களோடு நெருங்கிப் பழகிய பொன்னாவெளி உடையாரின் பேரனார் அருளம்பலம் அவர்கள் இன்று முதுபெருங் கிழவனார். திருக்கேதீஸ்வர நாதனை நம்பி வாழ்பவர். அவர் தமது தள்ளாத வயதிலும் தம்கைபட 24-12-86ல் தமது பாராட்டையும் வாழ்த்தையும் மில்க்வைற் தொழிலதிபருக்கு எழுதியுள்ளார்.

## பன்னாலையில் திருவெம்பாவை

பன்னாலையில் ஒருசபை தமது நாற்பத்தாறும் ஆண்டு விழாவும் திருவெம்பாவை நாள்விழாவும் கொண்டாடிய வேளையில் மில்வைற் பிரசுரங்கள் பிரசாதம் போல விநியோகமாயின.

★ **அன்றுமுதல் இன்றுவரை அழியாத தமிழ்** ★

## பேரரசிக்குப் பெருவிழா

பிரித்தானியாவில் அரசுகட்டிலேறியவர்களுள் 64 ஆண்டுகள் அரசுவீற்றிருந்த அன்னை விக்ரோறியா 1819 இல் தோன்றி 1837 இல் அரசியானவர். அவர் 1887 ஆம் ஆண்டில் ஆட்சியின் பொன்விழாக் கண்டபோது, அதன் பொலிவு யாழ்ப்பாணத்து முற்றவெளியிலும் காணக்கூடியதாயிருந்தது. அன்று 20-6-1887 ல் முற்றவெளியில் கோலாகலமாகக் கொண்டாடப்பெற்ற பெருவிழாவில் யாழ்ப்பாணத்துப் புலவர்கள் தங்கள் வாழ்த்துப்பாக்களை வரிசையாகப் பாடாண்டினை செய்தனர். அவற்றுள் எரேமியாப் புலவர் பாடிய பாடல்களில் ஒன்று ஒலிக்கிறது.

சற்குண மேயணி யேயழ கேதையல் நாயகமே
விற்பன ஞானக் களஞ்சிய மேயவி யாவிளக்கே
யற்புத மேபிரித் தன்யசாம் ராச்ய அதிபதியே
விக்ரோறி யாவெனுந் தாயே வியந்திடுமே.

யாழ்ப்பாணத்தில் நல்ல புலமைப் பரம்பரையில் தோன்றித் தக்க பெரியவர்களிடம் தமிழையும் சமஸ்கிருதத்தையும் கற்று, நல்ல புலமைப் பாரம்பரியத்தை உருவாக்கிவிட்டுப்போன சுன்னுகம் குமாரசாமிப் புலவரவர்களின் முன்னேர்வழி வருமாறு. நாகநாதபிள்ளை–சந்திரசேகரம்பிள்ளை, அம்பலவாணபிள்ளை, சின்னத்தம்பிப்பிள்ளை, அம்பலவாணபிள்ளை குமாரசுவாமிப்புலவர்

புலவர் அவர்களின் புலமையில் சின்னத்தம்பிப் புலவரின் எதுகைமோனை தவழ்ந்து விளையாடுவதை நன்கறிந்து எழுதியும் பேசியும் பெருமைபாராட்டிய உத்தம மாணுக்கன் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களாவர். புலவரவர்கள் மறைந்து அறுபத்தைந்து ஆண்டுகளாய் விட்டபோதிலும் அவருடைய பாடல்களின் சுவை இருந்தவாறு.

தமது தமிழ்ப் புலவர் சரித்திரம் என்னும் நூலை அச்சிடுவதற்கு உபகரித்த இராமநாதபுரத்துச் சேதுபதி ராசராசேசுவரரைப் பாராட்டிய பாடல்களிலொன்று கட்டளைக் கலிப்பாவாக ஒலிக்கிறது.

சீதை காவல ஞதின் ஞட்டிய
தேவராலயம் போற்றிடுங் காவலன்
நீதி காவலன் தொன்னெறி காவலன்
நீடுமுன்னவர் செய்தரு மங்களின்
பாதுகாவலன் பாவலர் காவலன்
பழைய வைதிக சைவர்கள் காவலன்
சீர்த்தி ராஜரா சேசுர மன்னனே.

ஒரு காலத்தில் உலகமெங்கும் அம்மைநோய் உயிர்களைக் குடித்துவந்தபோது அதைத் தடைசெய்வதற்குப் பால்கட்டும் முறையைக் கண்ட எட்வேட் ஜென்னர் தலைசிறந்த ஆங்கில மருத்துவ நிபுணர், 1749 முதல் 1823 வரை வாழ்ந்த பெருமகனுர்.

விஞ்ஞானிகள் துப்பாக்கி விசேடங்களைக் கண்டது வீண் விளைவாகிவிட்டது. உலகத்தில் மிகவும் நல்லவராயிருத்தல் மிகவும் மிகவும் கூடாது. உலகில் தலைசிறந்த கிறிஸ்தவர் ஒரு இந்துவாயே இருந்தார் என்றெல்லாம் உலகமக்கள் 30-1-1948 இல் கண்ணீர்விட்டழ ஒருவர் அகிம்சைகாத்து உயிர்விட்டார். அவரை ஒரு நிமிடம் நினைப்போமாக.



## தம்பதிகள் வாழ்க!

சாந்தி அச்சக உரிமையாளர் தி. நாகரத்தினம் அவர்கள் புதல்வியும், மில்க்வைற் சகோதரர்கள் மருகியுமாகிய செல்வி சாந்தாதேவி, மைத்துனன் உறவினராய விஜயசிங்கம் தயாபரன் அவர்களை மணந்து இல்லறமேற்றமை ஏழாலை, மல்லாகம், வண்ணைநகர் ஆகிய ஊர்களில் வாழும் உறவினர் யாவருக்கும் பெருமகிழ்ச்சியாகும். மணமகனும் தயா அச்சக உரிமையாளரெனவே அச்சக வித்தகர்களாய இவர்கள் வாழ்வு கலைவளம் நிரம்பியதாகும். இதனுல் தமிழ்வளர்க்கும் பெரும்பணியும் இவர்களும் தமிழ்போல் வாழ்க.

# வழக்கம்பரையில் வரவேற்பு

திருவெம்பாவைத் திருநாள்களில் இடையிடை மழை பெய்த ஈரநிலத்தில் மில்க்வைற் மரம் நாட்டுவிழா பிரதேசமெங்கும் பெருமளவில் நடைபெற்றது. அன்று ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்ற பெருவிழாவில் வழக்கம்பரை ஊர்மக்கள் முத்துமாரியம்மன் கோயிலடியில் குவிந்திருந்தனர். பெரிய வான் நிறையப் பலவகை மரக்கன்றுகளையும், விதைகளையும் கொண்டு சென்ற மில்க்வைற் தொழிலதிபரைக் கோயிலார் அந்தணர் முன்னிற்ப வரவேற்றுபசரித்தனர்.

தலைமை தாங்கிய ஞானசந்திரமூர்த்தி ஆசிரியர், தொழிலதிபர் தாயார் வழக்கம்பரை ஊரிலேதான் பிறந்தார் என்றும் அவரின் கொடைவளம் கோயிலுக்கு நிறையக் கிடைத்ததென்றும் பெருமைப்படப் பாராட்டிப் பேசுமாறு வேண்ட, மில்க்வைற் தொழிலதிபர் வாழ்க்கை முறையையும், நல்லொழுக்கத்தையும் வற்புறுத்தி மரம் நாட்டும் பணியை ஊக்குவித்து, மரமே நாட்டுக்கு இன்றியமையாதது என்றும் பேசினார். கோயில் குளம், தல விருட்சம் என்றெல்லாம் பேசி, வாழ்வை இன்பகரமாக நடத்துவதற்கு நேரசூசியமைத்து ஒரு சில நிமிடம் யோகாசனம் செய்தல் வேண்டும் என்றும், எல்லோரும் நன்றாக உழைத்தல் வேண்டும் என்றும், எங்கள் சொந்தக்கலை, கலாச்சாரம் முதலியவற்றைப் பேணிப் பாதுகாத்தல் வேண்டும் என்றும், வீட்டுக்காரிகள் தத்தம் வீட்டுவளவில் தோட்டம் செய்து மரக்கறி வகைகளைப் பெறுதல் வேண்டும் என்று பேசினார்.

தொடர்ந்து இப்பில் இப்பில், வேம்பு, சவுக்கு, இலுப்பைமுதலிய மரங்களின் சிறப்பியல்புகள் பற்றியும் பழமரங்களைப் பற்றியும், இலகுவான முறையில் பப்பா மரம் பழந்தரும் என்றும் குறிப்பிட்டார். படிப்பார்வம் எங்கள் மக்களை வாழவைக்கும் என்றும், ஆத்திசூடி முதல் ஏனைய நூல்களைப் படிப்பதற்கு மில்க்வைற் தாபனம் இலவசமாக நூல்களை ஆயிரக்கணக்கில் வழங்குகின்றதென்றும், மில்க்வைற் தொழிலகம் என்றும் எவர்க்கும் எதனையேனும் உதவுவதற்கு ஆயத்தமாயிருக்கிறது என்றும் கூறினார். இன்னும் எல்லோரும் ஒருமுகமாக ஒற்றுமையாயிருக்கவேண்டும் என்றும், எங்களை உள்ளத்தால், சொல்லால், செயலால், தகுதியுள்ளவர்களாக்கி, இறை வழிபாடு செய்தல் வேண்டும் என்றும், எங்கள் ஊர்த் தெய்வம் முத்துமாரி அம்மன் திருவருள் எமக்கெல்லாம் உறுதுணையாயுள்ளது என்றும் கூறி வாழ்த்தினார்.

மில்க்வைற் தொழிலதிபரின் உபகரிப்புக்களிடையே சிதம்பரநடராசரின் திருநடனச் சிறப்பின் மூவர்ணப் படங்களும், சமயப்பிரசுரங்களும் சிறப்பிடம் பெற்றமையை வர்த்தகர் துரையப்பா இராசரத்தினம் அவர்கள் பாராட்டிப்பேசினார். திரு துரையப்பா இராசரத்தினம் அவர்கள் ஊரவர், அயல் ஊரவர் பெருமைப்படுமளவில் உதவிக்கரம் நீட்டி மக்கள் தொண்டு செய்யும் ஒரு மகான் என்பது ஊரவர் மதிப்பீடு. வழக்கம்பரையம்மனின் அழகு பார்ப்பதில் பேரார்வமும் பேராவலும் கொண்ட பரம்பரையில் வந்து உபகரித்து வாழ்பவர்.

இராசரத்தினம் அவர்கள் மில்க்வைற் தொழிலதிபரின் சேவையைப் பாராட்டியபோது, இவர் நாவலருக்குக்கிட்ட வந்த பெரியவர் என்று நகைச்சுவையோடு பாராட்டினார்.

விவசாய உத்தியோகத்தர் சந்திரசேகரம் மரம் நடுகையின் பலன்களைப் பேசியபின் திரு. வாமதேவன் புலமையோடு பேசி நன்றி கூறிய போது அம்மன் கோயிலின் பாரிய திருப்பணி வேலைகளை வியந்து பாராட்டினார்.

வழக்கம்பரை ஒரு பழைய ஊர். இதன் கிழக்கில் சித்தங்கேணியும், தெற்கில் தொல்புரமும், மேற்கு பொன்னாலையும், வடக்குப் பண்ணாகமும் அமைந்துள்ளன. இது தொல்புரத்தின் இருதயத்தானமாயும் அமைந்ததாகும்.




## சென்ற காலமும்
## இனி வருங்காலமும்

மில்க்வைற் தொழிலகம் இன்று வரை செய்துவந்த சேவைகளில் பழுதிலாச் சிறப்புக்கு உங்கள் அமோக ஆதரவே காரணமாகும். அதுபோல் இனிவருங்காலத்துப் பெருஞ்சேவைக்கும் உங்கள் ஆதரவு எங்களுக்குத் தேவை. நீங்கள் இது வரை கொடுத்துவந்த நல்லாதரவிற்கு எங்கள் நன்றி.

**மில்க்வைற்- யாழ்ப்பாணம்.**

யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் "சிவநெறிப் புரவலர்'' க. கனகராசா ஜே. பி. அவர்கள்
கௌரவ ஆசிரியர் திரு. க. சி. குலரத்தினம் 1 - 1 - 87